

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்ற 3வது பட்டமளிப்பு விழாவில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் நேற்று முன்தினம் (10.06.2025) இளங்கலை மருத்துவ மாணாக்கர்களுக்கு பட்டம் மற்றும் பதக்கங்களை வழங்கினார்கள். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னதுரை (கந்தர்வக்கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.எஸ்.கலைவாணி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று முன்தினம் (10.06.2025) சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் 351வது வாரியக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, சென்னை குடிநீர் வாரியத்தின் செயல் இயக்குநர் கௌரவ் குமார் மற்றும் வாரிய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. முன்னிலை!

# கரூர் அரசு மருத்துவமனையில் புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

கரூர், ஜூன் 12 - நலன் காக்கும் ஸ்டாலின் என்கிற மாபெரும் புதிய திட்டத்தினை விரைவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்கள். தமிழ்நாடு முழுவதும் முகாம்கள் நடத்தி பொதுமக்களுக்கு இலவச முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்படும் புதிய திட்டத்தினை கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற முதல் பட்டமளிப்பு விழாவில் வி. செந்தில் பாலாஜி முன்னிலையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்தார்.

கரூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், கரூர் மாவட்ட கழக செயலாளர், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி ஆகியோர் ரூ.30.25 கோடி மதிப்பீட்டில் 11 புதிய கட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும்,

ரூ.4.08 கோடி மதிப்பீட்டி 10 புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களை திறந்து வைத்தனர். பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், கரூர் மாவட்ட கழக செயலாளர், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி ஆகியோர் கரூர், அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்ற இளங்கலை மருத்துவப் பட்டமளிப்பு முதலாவது விழாவில் 143 மாணவ மாணவிகளுக்கு மருத்துவர் பட்டங்களை வழங்கினர். இவ்விழா மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில், கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர். இளங்கோ, க.சிவகாம சுந்தரி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!**

அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசியதாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, கரூர் மாவட்டத்தில் மருத்துவத் துறையின் சார்பில் தொடர்ச்சியாக மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள். புதிய மருத்துவ கட்டிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இன்றைய தினம் இக்கல்லூரியில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் 143 இளங்கலை மருத்துவ மாணவ, மாணவியர்கள் பட்டம் பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் பெறுகின்றனர். இவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். அரசு மருத்துவ சேவையினை பொதுமக்கள் தற்போது அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மொத்தம் 1000 படுக்கை வசதிகளுடன் 26 பிரிவுகளாக செயல்பட்டு வருகிறது. இதில் நாளொன்றுக்கு உள்நோயாளிகள் மட்டும் 170 பேரும். புறநோயாளிகள் 2,500பேரும் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். கரூர் அரசு மருத்துவக் கல்லூரியை மேம்படுத்தும் விதமாக கடந்த ஆண்டுகளில் ரூ.1246 கோடி மதிப்பீட்டில் வெண்டிலேட்டர், அறுவை சிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட நவீன மருத்துவக் கருவிகள், அறுவை சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. கரூர் மாவட்டம் முழுவதும் ரூ.24.51 கோடி மதிப்பீட்டில் 36 மருத்துவ கட்டிடங்கள் மற்றும் உயர் மருத்துவ உபகரணங்கள் தொடங்கி வைக்கப்பட்டு மருத்துவ சேவைகள் பொதுமக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

உலக அளவில் அச்சுறுத்தும் நோயாக அமைந்துள்ள புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் முழுமையாக 100 சதவிகிதம் குணப்படுத்த முடியும். ஆனால் 3 மற்றும் 4 ஆம் நிலையில் கண்டறிந்தால் அது உயிருக்கே ஆபத்தாக அமைந்து விடுகிறது. புற்றுநோயினை மிகத்துல்லியமாக கண்டறியும் வகையில் பெர்ஸ்சிடைஸ் ஸ்கேன் அமைந்துள்ளது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்தியாவில் வேறு எங்கும் செய்திடாத நிலையில், புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய உதவிடும் 'பெட் சி.டி. ஸ்கேன் களை" முதன்முதலில் தொடங்கி வைத்துள்ளார்கள். இந்த அரசு அமையும் முன்னதாக தமிழ்நாட்டில் 'பெட் சி.டி ஸ்கேன்' சென்னை மற்றும் மதுரை ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே அமைக்கப்பட்டு இருந்தது. ஆனால் அரசு பொறுப்பேற்று 4 ஆண்டுகளில் சேலம், கோவை, காஞ்சிபுரம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 இடங்களில் பெட் சி.டி. ஸ்கேன்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விரைவில் "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் மாபெரும் திட்டத்தினை தொடங்கி வைக்க உள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் பொது மருத்துவம். எலும்பியல் மருத்துவம். குழந்தை மருத்துவம் உள்ளிட்ட 15 சிறப்பு மருத்துவ சேவைகள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் இம்முகாம் நடைபெறவுள்ளது.

இன்று பட்டம் பெற்றுள்ள மருத்துவ மாணவர்கள் மருத்துவப்பணியில் சிறப்பாக தொண்டாற்றிட வேண்டும். இவ்வாறு அமைச்சர் பேசினார்.

**வி.செந்தில் பாலாஜி பேச்சு!**

கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேசியதாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தரமான மருத்துவ சேவைகளை தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களுக்கு கிடைப்பதை தொடர்ந்து உறுதி செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.அந்த வகையில் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 24 மணி நேரமும் தங்கு தடையின்றி மின்சாரம் வழங்கிடும் வகையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதிய உயரழுத்த 3.2 கி.மீ. மின் பாதை வெறும் 7 நாட்களில் அமைத்து 24 மணி நேரமும் தடையின்றி மின்சாரம் வங்கப்பட்டு வருகிறது.

மேலும் கரூர் மாவட்டதில் கடந்த ஆண்டுகளில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் மொத்தம் 4,24,504 நபர்கள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டத்தின் கீழ் 61.394 நபர்கள் ரூ.26.66 கோடி மதிப்பீட்டில் நிதியுதவி பெற்றும். கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டத்தின் கீழ் 120 முகாம்கள் மூலம் 1.25.634 நபர்களும், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட 4 அரசு மருத்துவமனைகள் மற்றும் 5 தனியார் மருத்துவமனைகளில் விபத்தில் பாதிக்கப்பட்ட 8778 நபர்கள் சிகிச்சைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

இன்றைய தினம் பட்டம் பெற்றுள்ள அனைத்து மருத்துவ மாணவர்களும் ஏழை எளிய மக்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சைகளை வழங்கி சிறப்பாக பணியாற்றிட எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

தொடர்ந்து ரோட்டரி கிளப் ஆப் கரூர் சிஎஸ்ஆர். நிதி மூலம் ரூ.40:12 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தானியங்கி பயோ கெமிஸ்ட்ரி அனலைசர் கருவியும். ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் இரத்த பகுப்பு இயந்திரமும், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் ஆண்டான்கோவில் நகர்ப்புர துணை சுகாதார நிலையம் , ரூ.30இலட்சம் மதிப்பீட்டில் மாங்காசோளிபாளையம் நகர்ப்புர துணை சுகாதார நிலையம், ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சின்னதாராபுரம் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ..50.இலட்சம் மதிப்பிட்டில் பஞ்சப்பட்டி வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம். ரூ.33 இலட்சம் மதிப்பீட்டி இனுங்கூர் செவிலியர் குடியிருப்பு கட்டிடம்.ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் இராஜேந்திரம் துணை சுகாதார நிலையம், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மனத்தட்டை நகர்ப்புர துணை சுகாதார நிலையம், ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் உப்பிடமங்கலம் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம் என மொத்தம் ரூ.408 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 10 மருத்துவ கட்டிடங்களை திறந்து வைத்தும்,

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.23.75 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடத்திற்க்கு 65.00 இலட்சம் மதிப்பீட்டு, வாங்கல் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்திற்க்கும்.

ரூ.60இலட்சம் மதிப்பீடு, உப்பிடமங்கலம் அரசு ஆர ம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.45 இலட்சம் மதிப்பீட்டு, மணவாடி துணை சுகாதார நிலையத்திற்க்கும். ரூ.1.50 கோடி மதிப்பீட்டு, கார்விழி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்க்கும். ரூ.45இட்சம் மதிப்பீடு, நொய்யல் துணை சுகாதார நிலையத்திற்க்கும், ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில், அய்யர்மலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும். ரூ.75.லட்சம் மதிப்பீட்டில், வளையப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்க்கு ரூ.45.இலட்சம் மதிப்பீட்டில், வளையப்பட்டி துணை சுகாதார நிலையத்திற்க்கும். ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில், அ.உடையாபட்டி துணை சுகாதார நிலையத்திற்க்கும் மற்றும் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கள்ளை துணை சுகாதார நிலை யத்திற்கு என மொத்தம் ரூ.30.25 கோடி செலவில் 11 புதிதாக கட்டப்படவுள்ள மருத்துவ கட்டிடங்களுக்கு அமைச்சர் மா. சுப்பிரமணியன், வி.செந்தில் பாலாஜி ஆகியோர் அடிக்கல் நாட்டி, 143 மாணாக்கர்களுக்கு இளங்கலை மருத்துவப் பட்டங்களை வழங்கினார்கள்.

இவ்விழாவில், மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. லோகநாயகி, மாநகராட்சி மேயர் வெ.கவிதா, இணை இயக்குநர் மருத்துவப் பணிகள் மருசெழியன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு சுப்பிமணி, துணை மேயர் ப.சரவணன், மண்டலத் தலைவர்கள் எஸ்பி.கனகராஜ், ஆர். எஸ்.ராஜா, அலுவலர்கள், கலந்துகொண்டனர்.

### சென்னை - சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் புத்தகப் பூங்கா!

#### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 11 -

சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் சென்னை புத்தகப்பூங்காவைத் தொடங்கிவைத்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**இனி, சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் சந்தித்துக்கொள்ளும் உறவுகளும் நட்புகளும், அன்பை பரிமாறிக்கொள்வதைப் போல், புத்தகங்களைக் கொண்டு அறிவைப் பரிமாறிக்கொள்ள சென்னை புத்தகப்பூங்காவைத் தொடங்கியுள்ளோம்!**

**சிந்தனையை உயர்த்திடும் நூல்கள் நமது (வாழ்க்கைப்) பயணங்களில் துணையாகட்டும்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### சென்னை, தரமணியில் உலக வங்கி சார்பில்

# நவீன உலகளாவிய வணிக மையம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜீன் 12 - முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.6.2025) சென்னை, தரமணியில் உலக வங்கியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள நவீன உலகளாவிய வணிக மையத்தை (Global Business Centre) திறந்து வைத்தார்.

கடந்த 2001ஆம் ஆண்டு 70 அலுவலர்களைக் கொண்ட ஒரு சிறிய குழுவுடன் நிறுவப்பட்ட சென்னை உலகளாவிய வணிக மையம் (Global Business Centre) விரிவாக்கப் பட்ட போது செப்டம்பர் 2006ல் தரமணியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது மார்ச் 2025ன்படி 1,500க்கும் மேற்பட்ட பணியாளர்களோடு, உலகளவில் 130க்கும் மேற்பட்ட உலக வங்கி அலுவலகங்களின் மூலம், 189 உறுப்பு நாடுகளுக்குச் சேவை செய்யும் ஒரு முக்கிய உலகளாவிய மையமாக வளர்ந்துள்ளது. அதன் திறமைமிக்க குழு, வலுவான உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டாளர் நட்பு நிர்வாகம் ஆகிய வற்றால் ஈர்க்கப்பட்டு, தீவிரமான உலகளாவிய தேடலுக்குப் பிறகு, சென்னை மையம் உலக வங்கிக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**அதிநவீன வசதி!**

கடந்த 24 ஆண்டுகளில், தமிழ்நாட்டுப் பணியாளர்களின் முன்மாதிரியான அர்ப்பணிப்பு மற்றும் மீள்தன்மை மூலம், சென்னை உலகளா விய வணிக மையம் உலக வங்கிக் குழுமத்தின் பல நிறுவன செயல்பாடுகளை ஆதரிக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது. இந்த தரமணி மையம் புதிய ஒத்துழைப்பு மண்டலங்கள் மற்றும் மேம்பட்ட டிஜிட்டல் உள்கட்டமைப்புடன் கூடிய அதிநவீன வசதியை வழங்குகிறது.

உலக வங்கி குழு மத்தின் முக்கிய செயல்பாடுகளை ஆதரிப்பதில் சென்னை உலகளாவிய வணிக மையம் முக்கிய பங்கு வகிக்கிறது. LEED பிளாட்டினம் சான்றிதழ் மூலம் காலநிலை மீள் கட்டமைப்புக்கு ஆதரவளித்து, சூரிய மின்சக்தி மற்றும் மழைநீர் சேகரிப்பு உள்ளிட்ட வசதிகளும் இம்மையத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

**அத்தியாவசிய நிறுவன சேவைகள்!**

நிதி, கணக்கியல், கொள்முதல், நிர்வாகம், அறிவு மேலாண்மை, கருவூலம், மனித வளங்கள், இடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு களங்களில் அத்தியாவசிய நிறுவன சேவைகளை இந்த மையம் தொடர்ந்து வழங்கும்.

இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, ஒன்றிய அரசின் கேபினட் செயலாளர் முனைவர் டி.வி. சோமநாதன்,தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் வென்காய் ஜாங், உலக வங்கியின் இந்தியாவிற்கான இயக்குநர் அகஸ்டே டானோ கோமே, சென்னை மையத் தலைவர் சுனில் குமார், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர். பிரஜேந்திர நவ்நீத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உலக வங்கியின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சி மாவட்டம் முசிறி வட்டம் குணசீலம் கிராமத்தில் காவிரியின் வடகரையில் எல்லை காவல் தெய்வமாக எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ பிடாரி இளவாய் அம்மன் ஸ்ரீ முத்து கருப்புசாமி ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழாவில் திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டார். திருக்கோவில் திருப்பணி பாடுபட்ட திருப்பணி கமிட்டியினர் குணசீலம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச திருக்கோயிலின் பரம்பரை டிரஸ்டி பிச்சுமணி ஐயங்கார், திருச்சி அன்பில் பால ரவிச்சந்திரன் சிவாச்சாரியார், குணசீலம் குணகோபால், ஆகியோருக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பட்டாடை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தார். உடன் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் நேர்முக உதவியாளர் சேகர் அருண் மற்றும் கிராம மக்கள் மற்றும் குடிப்பாட்டுக்காரர்கள் மற்றும் அனைவரும் கலந்து கொண்டனர்.



கோவை இரயில் நிலையம் அருகில் உள்ள திவ்யோதயா ஹாலில் மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் மறைந்த கழக பொதுக்குழு உறுப்பினர், வழக்கறிஞர் மா.மகுடபதி அவர்களின் திருவுருவப்படத்தை கழக அமைப்புச் செயலாளர், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இதில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எம். தண்டபாணி, பி.ஆர்.அருள்மொழி, மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.அன்பு செழியன், கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மருது பாண்டியன், துணை அமைப்பாளர்கள் விக்ரம், சலாவுதீன், எலிசபெத் ராணி, மூத்த வழக்கறிஞர்கள் நா.கனகராஜ், ஜி.டி.ராஜேந்திரன், அரசு வழக்கறிஞர்கள் வி.ரவிச்சந்திரன், சிவராமகிருஷ்ணன், கணேசன், சிவக்குமார், கிருஷ்ணமூர்த்தி, கண்ணன். மதிவாணன், நிஜலிங்கப்பா, ரவிச்சந்திரன், வெங்கடாசலம், சந்திரன், குணசேகரன், ராஜமாணிக்கம், சத்யா, லலிதா, ஜீவா உள்பட தோழமைக் கட்சி வழக்கறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.